# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.165** **நாள் : 13.12.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வர்தா புயலினால் பாதிப்படைந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மிட்புப்பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் இன்று(13.12.2016) மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் வர்தா புயலினால் பாதிப்படைந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப்பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு.கே.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆலோசனையின் போது, வர்தா புயல் மழையின்போது நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுக்களுக்கு தேவையான உணவு, குடி தண்ணீர், கழிப்பிட வசதி மற்றும் மின்வசதிகள் குறித்தும்,

புயலினால் சாலையில் விழுந்த மரங்கள், மரங்களை அப்புறப்படுத்தி சாலை போக்குவரத்தினை சரிசெய்திடவும் மின்தடை மற்றும் மின் வினியோகம் சீர்செய்திட மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், ஆலோசனை மேற்கொண்டார்.

மீட்புப்பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களுடன், பிற மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி பணியாளர்களை ஒருங்கிணைந்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும் 15 மண்டலங்களிலும் உள்ள கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் தலைமையில் பணிகளை விரைந்து போர்க்கால அடிப்படையில் செயல்ப்பட்டு துப்புரவு பணிகளை மேற்கொண்டு சாலை போக்குவரத்து, குடிநீர் வசதி, உணவு வசதி, கழிப்பிட வசதி மற்றும் மின்வசதி சீர்செய்து இயல்பு நிலையினை ஏற்படுத்திட ஒருங்கினைந்து அனைவரும் பணியாற்றிட வேண்டும் என அலுவலர்களுக்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் தெரிவித்தார்.

ஆய்விற்குப்பின் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தெரிவிக்கையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் வர்தா புயலினை தொடர்ந்து 27 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டு 3908 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நிவாரண முகாம்களில் தங்கியவர்கள் மற்றும் பாதிப்படைந்தவர்களுக்கு (13.12.2016) இன்று காலை 17,330 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கிய இடங்களாக கண்டறியப்பட்ட 266 இடங்களில் 162 இடங்களில் 156 மோட்டார் பம்புகளை பயன்படுத்தி மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று 12.12.2016 இரவு வரை சாலையில் விழுந்த 2810 மரங்களில் 1282 மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுத்திட 33 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு குளோரின் கலந்த குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பீளிச்சிங் பவுடர் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு பொது இடங்களில் தெளிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியை சேர்ந்த 18000 பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுப்பட்டுள்ளனர். மேலும், பிற மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 1758 பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு சாலையில் விழுந்துள்ள மரங்களை அப்புறப்படுத்தும் பணிகளில் ஈடுப்பட்டுத்தப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 70 மர அறுவை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் பிற மாவட்டகளிலிருந்து 150 மர அறுவை இயந்திரம், 60 ஜே.சி.பி. வாகனம் மற்றும் 200 லாரிகளைக் கொண்டு போர்க்கால அடிப்படையில் மரங்களை அப்புறப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

புயலினால் 2204 மின்கம்பங்களும், 888 தெருவிளக்குகளும் சேதமடைந்துள்ளது. தேவையான அளவு மின்கம்பம் மற்றும் தெருவிளக்குகள் போதுமான அளவு இருப்பு உள்ளது.

சாலையில் விழுந்த மரங்கள் அகற்றும் பணி நிறைவுபெற்றவுடன் மின் வினியோகம் சீர் செய்யப்படும். அனைத்து பணிகளும் போர்க்கால அடிப்படையில் விரைந்து நடைபெற்று வருகிறது. பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறு விரைவில் சரி செய்யப்படும் என மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வின் போது மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சுழல் துறை அமைச்சர்திரு.கே.சி.கருப்பண்ணன் அவர்கள், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள், **மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள்,** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர். எம்.மணிகண்டன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் திரு.கே.எஸ்.கந்தசாமி இ.ஆ.ப., உட்பட பலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**